DEPOSITION OF WITNESS
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI.
CC-74/2019
Prosecution witness – PW.1

| | | |
|---|---|---|
| Name | : திரு.காளிஸ்வரன் | Caste: |
| Father's Name | : | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |

( Accused present)
07.02.2024 – 12.32 PM

<u>முதல் விசாரணை</u>:-

1. நான் தற்போது தமிழ்நாடு அரசு வருவாய் துறையில் துணை ஆட்சியராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்று இராமநாதபுரத்தில் வசித்து வருகிறேன்.

2. நான் வழக்கு சம்பவ சமயத்தில் கமுதி வட்டாட்சியராக பணிபுரிந்து வந்தேன்.

3. கடந்த 30.06.2012ம் தேதியன்று நான் அலுவலகத்தில் பணியில் இருந்தபோது பரமக்குடி கோட்டாட்சியர் அவர்களிடமிருந்து தொலைபேசி தகவல் வந்தது. அபிராமம் பகுதியில் உள்ள அச்சங்குளம் கிராமப் பகுதியில் அமைந்துள்ள சுகன்யா சேம்பரில் விருதுநகர் மாவட்டம், காரியாபட்டி வட்டம், சாலை மறைக்குளம் கிராமம் மற்றும் அதைச் சுற்றியுள்ள கிராமத்தைச் சேர்ந்த சுமார் 13 குடும்பத்தினர் கொத்தடிமைகளாக வேலைப் பார்த்துக் கொண்டிருப்பதாக தகவல் வந்தது.

4. அதன் பேரில் நானும், மண்டலத் துணை வட்டாட்சியர் திரு.சுரேஷ், அபிராமம் வருவாய் ஆய்வாளர் திரு.கண்ணதாசன், அச்சங்குளம் விஏஓ திரு.போஸ் ஆகியோர் மேற்படி சுகன்யா சேம்பருக்கு சென்று விசாரணை நடத்தினோம்.

5. விசாரணையில் ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் சேம்பரின் உரிமையாளர் திரு. மூர்த்தி என்பவர் தலா ரூ.50,000/–கொடுத்து பணியில் அமர்த்தியிருந்தார். தினந்தோறும் ஆயிரம் செங்கல் அறுத்தால் ரூ.500/– யை

கூலியாக வழங்கி அதில் ரூ.150/—யை கொடுத்துவிட்டு மீதம் ரூ.350/—யை முன்பணமாக பெற்ற ரூ.50,000/—க்கு கழித்துவிடுவார்.

6. இந்த விபரம் அங்கு வேலை பார்த்துக்கொண்டிருந்த நபர்களிடம் விசாரித்து தெரிந்து கொண்டோம். மேலும் குடும்பத்தில் நல்லது கெட்டது போன்ற விசேஷங்களுக்கு குடும்பத்தில் ஒருவரை மட்டும் செல்ல அனுமதிப்பார்கள் என்றும் என்னிடம் தெரிவித்தார்கள்.

7. அவர்களில் கார்த்திக் என்பவரை கொடுமைப்படுத்தியதாக என்னிடம் தெரிவித்தார். அதன் பேரில் கோட்டாட்சியரிடம் சம்பவம் குறித்து தகவல் தெரிவித்துவிட்டு அபிராமம் காவல் நிலையத்தில் சுகன்யா செங்கல் சேம்பர் உரிமையாளர் திரு. மூர்த்தி என்பவர் மீது புகார் அளித்தேன்.

8. என்னிடம் காட்டப்படும் புகார் மனு என்னால் கொடுக்கப்பட்டது. புகாரில் பாதிக்கப்பட்ட 13 குடும்பங்களின் விபரங்களை குறிப்பிட்டுள்ளேன். அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:—

1. அழைபேசி மூலம் தகவல் வந்த விபரத்தைக் காட்ட ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. புகார் மனுவை எனது அலுவலக தட்டச்சர் தட்டச்சு செய்து கொடுத்தார்.

2. நான் கூறிய விபரங்களை தட்டச்சர் தட்டச்சு செய்தார். நான் எத்தனை மணிக்கு சம்பவ இடம் சென்றேன் என்று ஞாபகமில்லை.

3. அலுவலகத்திற்கு திரும்பி வந்த நேரம் ஞாபகமில்லை. நான் புகாரில் குறிப்பிட்டுள்ள பட்டியலில் கண்ட 32 நபர்களை விசாரிக்க எனக்கு எவ்வளவு நேரம் எடுத்துக்கொண்டது என்றால் சுமார் 5 மணி நேரங்கள் ஆனது. என்னிடம் அவர்கள் கூறிய விபரங்களை எழுதிக்கொண்டேன். அந்த ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. எங்களது அலுவலகக் கோப்பில் வைத்துள்ளேன்.

4. புகாரிலும், நான் போலீசாரிடம் கொடுத்த வாக்குமூலத்திலும் எந்த தேதியிலிருந்து எந்த தேதிவரை சம்பவம் நடைபெற்றதாகக் குறிப்பிட்டுக்

கூறியுள்ளேனா என்றால் சுமார் 5 மாதங்களாக பணி செய்து வருவதாகக் கூறினார்கள்.

5. நல்லது, கெட்டது போன்ற விசேஷங்களுக்கு சென்ற நபர்களில் யாரேனும் ஒருவர் காவல் நிலையத்திலோ அல்லது வருவாய்த் துறை அலுவலகங்களிலோ புகார் அளிக்கவில்லை என்றால் அது குறித்து எனக்குத் தெரியாது.

6. அருப்புக்கோட்டை கோட்டாட்சியர் அவர்கள் தகவல் தெரிவித்ததன் பேரில் பரமக்குடி கோட்டாட்சியர் அவர்கள் எனக்கு தகவல் தெரிவித்தார்.

7. அருப்புக்கோட்டை தாசில்தார் மீதும் பரமக்குடி கோட்டாட்சியர் மீதும் என் மீதும் எதிரி அளித்த புகாரின் பேரில் வழக்கு நடைபெற்றது என்றால் சரிதான். அந்த வழக்கு விசாரணையில் எங்கள் மூவர் மீதும் எந்தக் குற்றமும் இல்லை என்று விடுதலை செய்யப்பட்டோம்.

8. எதிரியின் அலுவலகத்தில் மேற்படி 32 நபர்கள் பணி புரிந்து வந்தார்கள் என்பதை உறுதி செய்து கொள்ள அங்கு பராமரிக்கப்படும் பதிவேடுகள் எதனையும் நான் கைப்பற்றவில்லை.

9. பட்டியலில் குறிப்பிட்டுள்ள பூங்காவன் (2 வயது), சோலைமலை (6 வயது), கலைச்செல்வி (3 ½ வயது), பாரதி (வயது 17), பவித்ரா (வயது 14) என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி இளவர்கள் எந்த வேலையும் செய்ய இயலாது என்றால் சரிதான். அவர்கள் பெற்றோர்கள் தான் வேலை செய்து வந்தார்கள்.

10. கொத்தடிமைகள் என்றால் சுயமாக எந்த செயலையும் செய்யவோ, எங்கும் செல்லவோ முடியாது என்றால் சரிதான். ஒருவர் வேலைக்கு செல்லும் இடத்தில் முன் பணம் பெற்றால் சம்பளத்திலிருந்து முன்பணத்தை கழித்துக் கொள்வது வழக்கம் என்றால் சரிதான்.

11. அங்கு பணிபுரிந்த மக்கள் எந்த தேதியில் எவ்வளவு தொகை முன் தொகையாக பெற்றார்கள் என்பதைக் காட்ட நீதிமன்றத்தில் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

12. நான் குறிப்பிட்டக் காலங்களில் நான் பட்டியலில் குறிப்பிட்டுள்ள நபர்கள் அவர்களது சொந்த ஊர்களில் தங்கி 100 நாள் வேலைத் திட்டத்தில் பணிபுரிந்து வந்துள்ளார்கள் என்றும், அங்குள்ள நியாய விலைக்கடையில் பொருட்கள் பெற்றுள்ளார்கள் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது.

13. ஒவ்வொரு ஆண்டும் நாங்கள் பணிபுரியும் தாலுகாவில் கொத்தடிமைகளாக யாரும் உள்ளார்களா என்பது குறித்து அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்றால் சரிதான்.

14. எனது அதிகாரத்தைப் பயன்படுத்தி எதிரி மீது பொய்யாக புகார் அளித்து அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

(S/d. ஜெ. சங்கீதா)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கமுதி.